सत्यमेव जयते

# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

**சிறப்பிதழ்**

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

**அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது**

---

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**
**(சட்டமியற்றுத் துறை),**
**புது தில்லி**

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், 1882 (4/1882), முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், 1939 (8/1939), அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், 1976 (49/1976), நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951 (54/1951), மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 (26/1881), நிறுமச் செயலாளர்கள் சட்டம், 1980 (56/1980) ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# நிறுமச் செயலாளர்கள் சட்டம், 1980

## (சட்ட எண் 56/1980)

[*1980, டிசம்பர் 10*]

நிறுமச் செயலாளர்கள் விழைதொழிலை ஒழுங்குறுத்துவதற்கு மற்றும் மேம்படுத்துவதற்கு வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்தோறாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

*1.* (*1*) இந்தச் சட்டம், நிறுமச் செயலாளர்கள் சட்டம், *1980* என்று வழங்கப்பெறும்.

(*2*) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(*3*) இது மைய அரசாங்கம் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் [1] குறிக்கலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள் மற்றும் பொருள்கோள்.

*2.* இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "உடனுழைப்பவர்" என்பது, நிறுவனத்தின் உடனுழைக்கும் உறுப்பினர் ஒருவர் என்று பொருள்படும்;

(ஆ) "நிறுமங்கள் சட்டம்" என்பது, நிறுமங்கள் சட்டம், *1956* என்று பொருள்படும்;

(இ) "நிறுமச் செயலாளர்" என்பது, நிறுவனத்தின் உறுப்பினராகவுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்;

(ஈ) "மன்றம்" என்பது, பிரிவு 9இன்படி அமைக்கப்பட்ட நிறுவனத்தின் மன்றம் என்று பொருள்படும்;

(உ) "கலைக்கப்பட்ட நிறுமம்" என்பது, நிறுமங்கள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுமச் செயலாளர்கள் நிறுவனம் என்று பொருள்படும்;

(ஊ) "உடனொத்தவர்" என்பது, கழகத்தின் உடனொத்த உறுப்பினர் என்று பொருள்படும்;

(எ) "நிறுவனம்" என்பது, இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட இந்திய நிறுமச் செயலாளர்கள் நிறுவனம் என்று பொருள்படும்;

(ஏ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ஐ) "தலைவர்" என்பது, மன்றத்தின் தலைவர் என்று பொருள்படும்;

(ஒ) "பதிவேடு" என்பது, இந்தச் சட்டத்தின்படி பேணப்படும் நிறுவனத்தின் உறுப்பினர்களின் பதிவேடு என்று பொருள்படும்;

(ஓ) "துணைத் தலைவர்" என்பது, மன்றத்தின் துணைத் தலைவர் என்று பொருள்படும்;

(ஔ) "ஆண்டு" என்பது, ஆண்டு எதிலும் ஏப்ரல் மாதம் முதல் நாளன்று தொடங்கி அடுத்துவரும் ஆண்டின் மார்ச்சு மாதம் 31 ஆம் நாளன்று முடிவடைகிற காலஅளவு என்று பொருள்படும்;

---

*1. 1-1-1981* அன்று செல்திறம் பெற்றது, *27-12-1980* இந்திய அரசிதழின் சிறப்புரை பகுதி II, பிரிவு *3*(ii) பக்கம் *2001*ஐப் பார்க்க.